1989 பிப்ரவரி 18] [திரு. மா. மணிமாறன்]

கொடுக்காமல் இருந்ததை விவசாயிகள் கடந்த அரசுக்குப் பல முறை வேண்டுகோள் விட்டும், நேரடியாகப் பார்த்தும், கேட்டும், விவசாயிகளுக்கு உதவாத நிலையில் இப்போது பொறுப்பு ஏற்றிருக்கின்ற கலைஞர் அரசும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் கொடுப்பதற்கு ஆய்வு செய்வதைப் பாராட்டி, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து, இது போன்ற கவன ஈர்ப்புக் கொடுப்பவர்கள் வினாவைத்தான் எழுப்பலாமே தவிர, வினா இல்லை என்று சொன்னால் விட்டு விடலாம்; அதனால் கண்டிப்பாகக் கேட்டுத்தான் ஆக வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

2. தகவல் கோரல்.

(அ) ஓட்டல் உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை.

திரு. வே. பெரியசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு முன்பு செய்தித் தாளில் மாண்புமிகு உணவு அமைச்சரவர்கள் ஓட்டல் முதலாளிகளுடன் கலந்து பேசி உணவுப் பண்டங்களின் விலைகளையெல்லாம் குறைப்பதாகச் செய்தித் தாளில் அறிந்தேன். அவர்களும், அவைகளுடைய முதலாளிகளெல்லாம் ஒன்று சேர்ந்து குறைப்பதாகச் சொல்லியிருந்தார்கள். அதை எப்பொழுது குறைக்கப் போகிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு அமைச்சரவர்கள் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை எந்த அடிப்படையில் தாங்கள் எழுப்புகிறீர்கள் என்று சொல்ல முடியுமா? இப்படி எழுப்புவதற்கு அவையில் இடமில்லை. தனியாகக் கேட்க வேண்டும்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

* **திரு. ஆர். சிங்காரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது குறித்துப் பதில் அளிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் ஆய்வில் உள்ளது. அதுபற்றி அறையிலே கேட்க வேண்டும்.